பக்கங்கள்:11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 17 திங்கட்கிழமை 02.12.2024 கதிர் 025



## ஆளும்தரப்புக் கொள்கைகளை ஏற்று தனியார் துறை பயணிக்கவேண்டும்

### அயலுறுவுத்துறை அமைச்சர் கோரிக்கை

தனியார் துறையினர் ஆளும்தரப்பின் கொள்கைகளைஏற்றுக்கொண்டுஇணைந்து பயணிப்பதற்கு வரவேண்டும் என்று என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று அமாரி ஹோட்டல் குழுமத்துக்கு சொந்தமான அமாரி கொழும்பு ஹோட்டலை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியஅவர்மேலும்தெரிவித்ததாவது:

எமது நாடானது உலகில் முக்கியமான வகிபாகத்தினைக் கொள்வதற்கும், உயர்ந்த மட்டத்தில் இருப்பதற்கும் சுற்றுலாத்துறை மிகவும் முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றது.

இன்றையதினம் (நேற்று) ஹோட்டல் திறக்கப்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் எமது நாடு சர்வதேசத்துடன் கைகோர்ப்பதற்கும், இணைந்து ☞ 8

## இனி இது ரகசியம் அல்ல!

தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவதுஎன்றுதேசியமக்கள்சக்தி ஆளும்தரப்புத் தீர்மானித்திருந்தது. இந்தத் தடவை தேசிய மக்கள் சக்தி மூலம்தேர்தலில்போட்டியிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் புதியவர்கள். பெரும்பாலும் அரசியல் பின்புலம் ஏதுமில்லாதவர்கள். மத்திய அல்லது வறுமை வாழ்நிலையைக் கொண்டவர்கள். அவர்களால் தமது சொந்தப் பணத்தையோ வாகனத்தையோ செலவிட்டு மக்கள் சேவையாற்ற முடியாத நிலை இருந்தது. இதனால் மக்களுக்கும் தமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் வழக்கூடிய இடைவெளியைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு அரச செலவில் வாகனங்களை வழங்குவதற்கு ஆளும் தரப்புத் தீர்மானித்திருந்ததது.

அமைச்சுக்கள் மட்டத்தில் ☞ 2

## மக்களைச் சுரண்டிப் பிழைக்கிறது தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும்

### ஒன்றிணைந்த தொழிற்சங்க பேச்சாளர் காட்டம்

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பும் முன்னைய ஆளும் தரப்புக்களைப் போலவே மக்களைச் சுரண்டிப் பிழைக்கிறது. வாழ்க்கைச்செலவுகளை குறைப்பதாக குறிப்பிட்ட வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் தேர்தல் பரப்புரைகளாக மாற்றமடைந்துள்ளது என்று ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஊடக பேச்சாளர் ஆனந்த பாலித்த தெரிவித்தார். ☞ 2

## அவ்வளவு இலகுவில் ஆட்சியை தேசிய ம. சக்தி கைவிட்டுவிடாது

### அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு

பல்வேறு நெருக்கடிகளின் பின்னர்தான் ஆட்சியைப் பிடித்துள்ளோம். அதனால் அதிகாரத்தை இலகுவில் கைவிட்டு விடுவோம் என்று நினைக்க வேண்டாம். நாட்டை முறையாக கட்டமைத்த பின்னரே மக்கள் விரும்பினால் ஆட்சியை ஒப்படைப்போம் என்று ☞ 8

## சேதமான வயல்களை மதிப்பிட விசேட குழு

வெள்ளத்தால் சேதமடைந்த வயல் நிலங்கள் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

25 மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக சபை கூறியுள்ளது. வெள்ள நீர் வடிந்த ☞ 8

## சிங்கள, பௌத்தத்தை மலினப்படுத்த புலம்பெயர் தமிழர்களின் நிதியில் சதி

### ஓமல்பே சோபித தேரர் கொந்தளிப்பு

இலங்கையில் சிங்கள, பௌத்தத்தினை மலிப்படுத்துவதற்காக புலம்பெயர் தமிழரின் நிதிப்பங்களிப்பில் சதித்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக பேராசியர்ஓமல்போ சோபித்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மருதானையில் உள்ள குலரத்ன அரங்கில்நேற்றுநடைபெற்றநிகழ்வென்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை பௌத்த நாடில்லை, புத்தபெருமான் இங்கு இருக்கவில்லை போன்ற வரலாற்றுடன் தொடர்புடைய விவாதங்கள் வெறுமனே சமயத்தினை அடிப்படையாக வைத்தவை அல்ல. இதற்குப் பின்னால் பெரும் சதித்திட்டங்கள் நிறைந்துள்ளன. பௌத்தர்களுக்குஇடையில் வாதப்பிரதிவாங்களைஉருவாக்குதல்இதன் முதல் நோக்கமாகும். இரண்டாவதாக, கற்பனைக் கதையொன்றாக ☞ 2

## 2025 பெப். முதல் வாகன இறக்குமதி

### இறக்குமதியாளர்கள் சங்கம் நம்பிக்கை

வாகன இறக்குமதி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் ☞ 8

## முகநூலில் தலைவர் படம்; கைதானவருக்கு மறியல்

தமிழீழவிடுதலைப்புலிகள்அமைப்பின் தலைவரது புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாக கைதான இளைஞரை டிசெம்பர் 4 வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் ☞ 2



## ஒன்றரை லட்சம் பேர் இன்னும் வீடுகளுக்குத் திரும்பவில்லை

சீரற்ற வானிலை காரணமாக 24 மாவட்டங்களில்53,888குடும்பங்களைச் சேர்ந்த 143,726 பேர் இன்னும் பாதுகாப்பான இடங்களிலும் உறவினர் வீடுகளிலுமே தங்கியுள்ளனர்.

45,418 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 16 ஆயிரத்து 209 பேர் உறவினர் வீடுகளிலும், 8,470 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 517 பேர் 229 பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

103வீடுகள்முழுமையாகவும் ☞ 8

## தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம் குறித்து விசாரணை

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்றதமிழீழ விடுதலைப் புலிகளின்தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் தொடர்பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற ஐந்து பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளின் தலைவரது பூர்வீக இல்லத்தில் நவம்பர் 26 தலைவரின் பிறந்தநாள் கேக் வெட்டிக் கொண்டாட்டப்பட்டது. இதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படத்தினை கொண்டபதாகை ஒன்றும் ☞ 8

### பயங்கரவாதத்துக்கு நிதி சேகரித்தாரென

## பிரித்தானியா வாழ் தமிழர் விமான நிலையத்தில் கைது

பயங்கரவாதக் குழுவொன்றிற்கு நிதி சேகரித்து பகிர்ந்தளித்த குற்றச்சாட்டின் பேரில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த 43 வயதான பிரித்தானிய பிரஜை ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சந்தேகநபர் 2009ஆம் ஆண்டு இலங்கையை விட்டுவெளியேறி பிரித்தானிய குடியுரிமையைப் பெற்றுள்ளார். இந்நிலையில்அவர் சனிக்கிழமை கட்டுநாயக்கவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை ☞ 2

## இனி இது .....

ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த அதி சொகுசு வாகனங்களை, எரிபொருள் பயன்பாடு அதிகமுள்ள வாகனங்களை விற்றுவிட்டு அதில்வரும்பணத்தைக்கொண்டுஎரிபொருள் சிக்கனம்மிக்க சிறிய வாகனங்களை வாங்கி நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குக்கொடுப்பது ஆளும்தரப்பின் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. ஆனால், எதிர்க் கட்சிகள் இந்தத் திட்டத்தைக் கச்சிதமாகப் பிடித்துக்கொண்டன. இது அரசமைப்பை, சட்டங்களை மீறும் செயல் என்று கடும் கண்டனங்களை எழுப்பின. ஆளும் தரப்பு அப்படிச் செய்தால் நீதிமன்றத்திற்குச் செல்வோம் என்று போர்க்கொடி தூக்கின. இந்தத் திட்டத்தால் ஆளும் தரப்பின் செலவுகள் குறைவதற்குப் பதில் அதிகரிக்கவே செய்யும் என்று சாடின.

கடைசியில்எதிர்ப்புக்களுக்குதேசியமக்கள் சக்தி அடிபணிந்துவிட்டது. எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த முதல் வெற்றியாக, திட்டத்தைப் பகுதியளவில் கைவிடுவதற்கு ஆளும்தரப்பு இப்போது முடிவு செய்திருக்கின்றது. ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்குவதற்கு எடுத்த தீர்மானம் மாற்றப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ கடமைகளுக்கு உத்தியோகபூர்வவாகனத்தைவழங்குவதற்குப் பதிலாகப் அவர்கள் பயன்படுத்தும் தனியார் வாகனங்களுக்கு எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்க ஆளும்தரப்பு இப்போது திட்டமிட்டு வருகின்றது என்று அந்த அதிகாரி கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்களை வழங்கும் திட்டத்தைக் கைவிட்டாலும் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டதில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு புதிய வாகனங்களை வரி இன்றி இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இந்த அனுமதிப்பத்திரம் மூலம் அதி சொகுசு வாகனங்களை தீர்வையின்றிஇறக்குமதிசெய்துகொள்ளலாம். வழக்கமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அனுமதிப்பத்திரத்தை இரண்டு முதல் மூன்று கோடி ரூபாய்க்கு விற்றுவிட்டு. அந்தப் பணத்தைக் கொண்டு தமக்கு ஒரு சிறிய வாகனத்தை வாங்கிக்கொள்வார்கள். எஞ்சிய பணத்தைப் பதுக்கிக்கொள்வார்கள். பணக்காரநாடாளுமன்றஉறுப்பினர்கள், தமது பந்தாவை வெளிப்படுத்த நவீன அதி சொகுசு வாகனங்களை வரி இன்றி நேரடியாகவே இறக்குமதி செய்து பயன்படுத்திவிட்டுப் பின்னர் விற்றுவிடுவார்கள்.

இந்த நாடாளுமன்றப் பதவிக் காலத்தில் அத்தகைய வாகன வரி நீக்க அனுமதிப்பத்திரங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று ஆளும்தரப்பு தெரிவித்திருக்கின்றது. வழக்கமாக அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாகவே இந்த தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். இந்த முறை அத்தகைய அமைச்சரவைப் பத்திரம் எதுவும் வழங்கப்படாது என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருந்தார்.

இதனால்தான்ஆளும்தரப்புநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குவது என்று ஆளும்தரப்புதீர்மானித்தது. அப்படிநடந்தால் எதிர்க் கட்சி உறுப்பினர்களில் பலரும் தாமும் வாகனங்களைக் கேட்போம் என்று தெரிவித்திருந்தனர். இந்தப் பிரச்சினைகளை வாகனங்கள் கொடுக்கும் திட்டத்தை கைவிட தேசிய மக்கள் கட்சி ஆளும்தரப்புத் தீர்மானித்துள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்கள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கின்றபோது மகாவம்சம் செல்லுபடியற்றதாக மாறிவிடும். அப்படிப் பார்கின்றபோது வரலாற்று முக்கியத்துவமான அவணங்கள் செல்லுபடியற்றதாகிவிடும்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதால் சிங்களமக்களின்தாயகஉரிமைமுழுமையாக இல்லாதொழிக்கப்படும். இந்த வகையான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எவ்வாறு நிதி கிடைக்கின்றது என்பதைப் பார்ப்பது மிகவும் அவசியமானதாகும்.

அதற்கான நிதியானது, புலம்பெயர் தமிழர்கள்மற்றும்அவர்களின்அமைப்புக்கள் ஊடாகவே வழங்கப்படுகின்றன. இதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சாட்சி ஆவணங்கள் என்னிடமுள்ளன என்றார்.

## முகநூலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இணுவில் பகுதியைச் சேர்ந்தஇந்தஇளைஞன்நேற்றுயாழ்ப்பாணம் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞன் சார்பில் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஸ் வழக்கில் முற்பட்டார்.

## பிரித்தானியா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தடைந்தவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புவடக்குகுற்றத்தடுப்புபிரிவினரின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட வெளிநாட்டுபயணத்தடைக்குஅமையகுடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நபர் கைது செய்யப்பட்டதை அடுத்து விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தநபர் பிரித்தானியாவில் தங்கியிருந்து நிதி திரட்டினார் எனவும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக கொழும்பு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் உள்ள நபர்களுக்கு பணம் அனுப்பினார் எனவும் சந்தேகநபர் மீது குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில்தற்போது, கொழும்பு-வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினருடன் இணைந்து விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மக்களைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் மின்சக்தி மற்றும் சக்தி வலு அமைச்சர்மோசடியானமுறையில்அமுல்படுத்தி எரிபொருள்விலைச்சூத்திரத்தையேஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பும் அமுல்படுத்துகிறது.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி ஜனாதிபதி தேர்தல் காலத்தில், தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் 120 ரூபாவுக்கு ஒரு லீற்றர் பெற்றோலை விநியோகிக்க முடியும் என்றும்,, ஓரிரு மாதங்களுக்குப் பின்னர் துறைமுகத்துக்கு இறக்குமதி செய்யப்படும்போது நிர்ணயிக்கப்படும் விலைக்கு அமைவாகவே எரிபொருளின் விலைநிர்ணயிக்கப்படும்என்றும்குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்குவந்துஇரண்டுமாதங்கள்கடந்துள்ள நிலையில் 24 மணித்தியாலங்களில் எரிபொருள் விலை குறைப்பதாக குறிப்பிட்ட விடயம் மறக்கடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் பரப்புரைகளில் பேசுவதற்கும், அரச நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படும் என்பதை ஆளும்தரப்பு இப்போதாவது விளங்கிக்கொள்ளவேண்டும்.

எரிபொருள் இறக்குமதியின்போது முன்னாள் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு சென்ற தரகுப்பணம் இந்த ஆளும்தரப்புக்குச் செல்கிறது. இந்த ஆளும்தரப்பும் மக்களை சுரண்டிப் பிழைக்கிறது. வாழ்க்கைச் செலவுகளை குறைப்பதாக குறிப்பிட்ட வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் தேர்தல் பரப்புரைகளாக மாற்றமடைந்துள்ளது.

பெருந்தோட்ட மக்களை ஆளும்தரப்புக் கவனத்திற் கொள்ளவில்லை. மண்ணெண்ணையின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டமக்களின் பிரதிநிதிகளான அம்பிகாவிடம் தற்போது சுகமா என்று வினவுகிறோம் என்றார்.

# நாணய நிதிய உடன்பாட்டுக்காக அநுரவைப் பாராட்டிய ரணில்

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாடுகளை ஏற்றுக்கொண்டு தற்போதைய ஆளும்தரப்பு தொடர்ந்தும் இணங்கிச் செயற்பட்டு வருவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு பாராட்டு தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அமாரி ஹோட்டல் குழுமத்துக்கு சொந்தமான அமாரி கொழும்பு ஹோட்டலைத் திறந்துவைக்கும்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அமாரி கொழும்பு ஹோட்டல் குழுமமானது கொழும்பில் உள்ளஇலங்கைதொழிலதிபர்ஒருவருக்குச் சொந்தமான முதல் ஐந்து நட்சத்திர சர்வதேச சொகுசு விடுதி என்பது.

ரணில் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தொழிலதிபரின் ஐந்து நட்சத்திர விடுதியை திறந்துள்ளதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். கொழும்பில் மாணிக்ககல் உள்ளது. அது எங்குள்ளது என்பதைத்தான் நாம் தேடிச் சரியாகக் கண்டறியவேண்டும்.

கொழும்பில்சுற்றுலாப்பயணிகளுக்கான ஹோட்டல் அறைகளுக்கான கேள்விகள் அதிகமுள்ளன. அதேபோன்று உள்நாட்டில் நோய்களுக்கான சிகிச்சை பெறுபவர்கள் அவர்களின்உறவினர்கள்தங்கியிருப்பதற்கும் அறைகளின் தேவைகள் அதிகமாக உள்ளன.

அதேநேரம், நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்ட தருணத்தில் கடந்த இரண்டு வருடங்களை மிகுந்த சிரமத்துடன் நாம் முன்னகர்த்தி வந்திருந்தோம். குறிப்பாக, சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்பட ஆரம்பித்திருந்தோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்த்தினை தவிர்த்து வேறுவழியில் செய்வது மிகவும் கடினமானது. அந்த நிலைமையை உணர்ந்துகொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சர்வதேசநாணயநிதியத்தின்உடன்பாட்டை முன்னகர்த்திச் செல்வதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். அவருக்கு எனது பாராட்டுக்கள். நெருக்கடியான நிலைமைகளின் இருந்து மீண்டதன் பின்னர் நாம் அடுத்தகட்ட நகர்வு குறித்த திட்டமிட வேண்டியுள்ளது என்றார்.

# சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட லேண்ட் ரோவர் ரக ஜீப் சிக்கியது

சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பொல்கஸ்சோவிட்ட பகுதியில் உள்ள வாகன பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றிலிருந்து லேண்ட் ரோவர் ஜீப் வண்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

மேல்மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமையகுறித்தவாகனம்மீட்கப்பட்டுள்ளது.

வாகன பழுதுபார்க்கும் நிலைய உரிமையாளரிடம் வினவிய போது, சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மஹரகம பிரதேசத்தில் உள்ள விகாராதிபதி ஒருவரினால் லேண்ட் ரோவர் ரக ஜீப், வண்டி, செஸி, நான்கு டயர்கள் மற்றும் பழைய இயந்திரம் என்பன கொண்டு வந்து தரப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

காரை பழுதுபார்ப்பதற்கு தேவையான உதிரிபாகங்களை அவர் அவ்வப்போது கொண்டு வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அதன்படி, இந்த காரை குறித்த இடத்திற்கு வழங்கியதாக கூறப்படும் விகாராதிபதியிடம் வாக்குமூலம் பெறப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தற்போது, குறித்தஜீப்வண்டி மேலதிக விசாரணைகளுக்காக கெஸ்பேவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# காலாவதித் திகதியில் மோசடி செய்யப்பட்ட பொருட்கள் மீட்பு

காலாவதித் திகதி பற்றிய தகவல்களை மாற்றி பண்டிகைக் காலத்தில் சந்தையில் வெளியிடுவதற்கு தயார்படுத்தப்பட்டருந்த இறக்குமதி செய்யப்பட்ட கடலை, அரிசி மற்றும் காலாவதியான பேரீச்சம்பழம் களஞ்சியப்படுத்தப்பட்ட பல களஞ்சியசாலைகளை நுகர்வோர் விவகார அதிகாரசபை சுற்றிவளைத்துள்ளது.

ஆய்வு கூடங்களுக்கு விநியோகிப்பதற்கு தயாரிக்கப்பட்ட 50 லீற்றர் காலாவதியான இரசாயனப் பொருட்களையும் அந்த அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட காரியாலய அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நவம்பர் 28 களனி பெத்தியாகொட பிரதேசத்தில்உள்ளகளஞ்சியசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே அதிகாரசபை இந்த பொருட்களை கண்டறிந்துள்ளது.

மேலும்கடந்த28ஆம்திகதிவத்தளை பிரதேசத்தில் இறக்குமதியாளர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளால் பராமரிக்கப்படும்களஞ்சியசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, காலாவதியான 4.6 தொன் காய்ந்த மிளகாய்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததையும் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

காலாவதியான பொருட்களுடன் காலாவதியாகாத பொருட்களை சேமித்து வைப்பது நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், குற்றமாகும், என்பதால் அந்த வர்த்தகர்களுக்கு எதிராகவழக்குத்தாக்கல்செய்யப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பண்டிகை காலத்தில் காலாவதியான பொருட்கள், தகவல் மாற்றப்பட்ட பொருட்களை சந்தைக்கு அனுப்பும் வர்த்தகர்கள் மற்றும் களஞ்சியசாலை

அவதானமாக இருக்கமாறும், அத்தகைய தகவல்கள் இருப்பின், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் குறுகிய தொலைபேசி இலக்கமான 1977 க்கு தகவல் வழங்குமாறும் நுகர்வோர் விவகார அதிகாரசபை கோரியுள்ளது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சாவா. இந்து பழைய மாணவர்கள் உதவி

சாவகச்சேரி இந்துக்கல்லூரி 1983 சாதாரண தரம் கற்ற மாணவர்களின் நிதி அனுசரணையில் சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ஜெயபாலனின் ஒழுங்கமைப்பில் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயன் ஜெ.ரஜீவனின் பங்குபற்றுதலுடன் அவரது கழகமாகிய யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தினரால் புன்னாலைக்கட்டுவன், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி , கேவில் முள்ளியான் பகுதிகளுக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.





# காரைதீவிற்கு 6 நள்களாக குடிநீர் விநியோகம் இல்லை

(சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பாரிய நீர்க்குழாய் உடைத்தெறியப்பட்ட காரணத்தால் கடந்த ஆறு நாள்களாக காரைதீவுக் கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது.

தண்ணீரில் மிதந்த காரைதீவுக்கு தண்ணீர் இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்காலிகமாக மாவடி பள்ளியில் இணைப்பிலிருந்து குடிநீர் விநியோகத்தை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் சாய்ந்தமருது பொறுப்பதிகாரி கஜனி முருகேசு தலைமையில் அக்கரைப்பற்று பிராந்திய பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி , இயக்கமும் பராமரிப்பும் பிரிவிற்கான பொறியியலாளர் பாக்கியராஜா மயூரதன் மற்றும் காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி பொறியியலாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் ஆகியோர் காரைதீவு லவன் தலைமையிலானஇளைஞர்களின் உதவியுடன் இரவு பகலாக முயற்சி செய்த போதிலும் போதிய பலனளிக்கவில்லை எனத் தெரிகிறது.




இதனால் கடந்த ஐந்து ஆறு நாள்களாக காரைதீவு பெரும்பாக பகுதிக்கு குடிநீர் விநியோகம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பலத்த அசௌகரியத்துக்கு உள்ளானார்கள்.

அவ்வேளையில் சித்தானைக்குட்டி ஆலயம் மற்றும் இராவணா அமைப்பினர் வவுசர் மூலம் வீதி வீதியாக குடிநீர் வழங்கிவந்தனர்.

எனினும் பிரதான விநியோகம் சீர்செய்வது தொடர்பில் இதுவரை யாரும் கவனம் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தடை தொடர்பாகத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர் உயர் அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

# மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி சங்கத்தினரையும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு பாராட்டவேண்டும்

## அல்– மீஸான் பௌண்டேஷன் ஜனாதிபதிக்குக் கடிதம்

அம்பாறை மாவட்டம் காரைதீவு-மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவர்களில் ஐவரை உயிருடனும், 08சடலங்களையும் மீட்க ஐந்து நாள்களாக போராடிய மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பும் அவர்களுடன் இணைந்து அவர்களுக்கு பக்கபலமாக நின்று தேடுதல் நடவடிக்கைக்கு உதவிய காரைதீவு இராவணா இளைஞர்கள் அமைப்பினருக்கும் மற்றும் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையினருக்கும் ஜனாதிபதி, பிரதமர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை முச்சபை என்பன நேரடியாக அழைத்து கௌரவித்து உட்சாகப்படுத்த வேண்டும் என அல்- மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்கா கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளது.

அந்த கோரிக்கையில், காரைதீவு - மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மதரஸா மாணவர்கள் உள்ளிட்ட பலர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போகியிருந்த நிலையில் அன்றையதினம் மாலை தேடுதல் நடவடிக்கையின் போது 5 மாணவர்கள் வெள்ளத்தில் இருந்து காப்பாற்றப்பட்டனர். இந்தமீட்புப்பணியில்பாதுகாப்பு படையினரும் இணைந்திருந்த போதிலும் இவ்வாறான சிவில் அமைப்புக்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கதாக இருந்ததை நாம் இங்கு அடிகோடிட்டுகாட்ட வேண்டியுள்ளது.

மீட்புப்படையினரின் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து ஐந்தாவது நாளாக இடம்பெற்று வந்தது. அதன்போது நிந்தவூர் காஷிபுல் உலூம் அறபுக் கல்லூரி மாணவர்களின் 06 ஜனாசாவும், வாகன சாரதியின் ஜனாஸாவும், இன்னும் ஒரு இளைஞரின் ஜனாஸாவுமாக மொத்தம் 08 ஜனாஸாக்கள் மீட்புப்பணியாளர்களினால் மீட்கப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ஐந்து நாள்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் இவர்கள் முன்னெடுத்த பணியை பாராட்டி கௌரவிக்க வேண்டிய பொறுப்பு இலங்கையர்களாகவும், மனிதாபிமானிகளாகவும் நமக்கு இருப்பதாக நம்புகிறோம். இவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இதனை துரிதகதியில் முன்னெடுக்கதங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளத்தின் வான்பாயும் இடத்தில் வவுனியாவில் குவியும் மீன்கள்

வவுனியா குளத்தின் வான் பாயும் இடத்தில் நீருடன் பெருமளவான மீன்களும் வருவதால் அதனை போட்டி போட்டு மக்கள் பிடித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக பல குளங்கள் வான் பாய்ந்து வருவதுடன் அதில் வவுனியா நகரை அண்டியுள்ள பிரதான குளமான வவுனியா குளமும் வான் பாய்ந்து வருகிறது.

இந்த வான் பாயும் நீருடன் குளத்து மீன்களும் பெருமளவில் வருவதால் நுளம்பு வலை, மீன் வலை, துணி, வேட்டி என்பவற்றை கொண்டு மக்கள் மீன்களை போட்டி போட்டு பிடிப்பதை அவதானிக்க முடிகிறது.



சிலாப்பியா, யப்பான், விரால், கௌிறு போன்ற பெருமளவான மீன்கள் பிடிக்கப்படுவதுடன், அதனை பிடித்துச் செல்பவர்கள் மகிழ்ச்சியில் செல்வதையும் அவதானிக்க முடிகிறது. (100)



காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# விவசாயத்தின் மலர்ச்சிக்கான நீண்ட காலத் திட்டம் அவசியம்

இலங்கையின் விவசாயத் துறையானது பல துயரங்களைக் கொண்டுள்ளதுடன்,நடைமுறைச்சாத்தியமுள்ளநல்லகொள்கைகளின் அடிப்படையில், நன்கு திட்டமிடப்பட்ட மறுசீரமைப்பு நீண்ட காலமாகத் தேவைப்படும் துறையாகவுள்ளது. கடந்த காலங்களில் அரச உயர் மட்டம் மேற்கொண்ட தற்காலிக முடிவுகள் மற்றும் தன்னிச்சையான முடிவுகளின் தாக்கம் காரணமாக இந்தத் துறை கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளது,

இலங்கை நீண்ட காலமாகவே நவீன மாற்றத்தை எதிர்பார்த்திருக்கிறது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அந்த மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சில முன்மொழிவுகளை வைத்தார். ஒரு சில நகர்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.ஆனால்தேர்தல்காலச்சூழல்அவற்றையெல்லாம் மறக்கடித்துவிட்டன. விவசாயத்துறையின் நவீனமயமாக்கல் முறையான நீண்ட காலத் திட்டங்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்படாத நிலையே தொடர்கின்றது. அதாவது 5 ஆண்டுத் திட்டங்கள் அல்லது 10 ஆண்டு விவசாய மறுமலர்ச்சித் திட்டங்கள் எவையும் தயாரிக்கப்படவில்லை. தற்போதுள்ள அமைப்பை மாற்றியமைக்க திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்பத்தின் உட்செலுத்துதல் அவசியம். அதனை ஒரே இரவில் செய்து முடித்துவிட முடியாது. சீரான, சரியான திட்டங்கள் அவசியம்.

இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயம் முக்கிய பங்கு வகிக்கிறது, கிட்டத்தட்ட 27% மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், இலங்கையில் தொழில்முனைவோர் சனத்தொகையில் சுமார் 1.5% பேர் மட்டுமே, இது பல வளர்ந்த நாடுகளை விட குறைவாக உள்ளது.

கடந்த பல பத்தாண்டுகளில் விவசாயத்தின் வளர்ச்சி விகிதம் குறைவாகவே உள்ளது, 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடித்தல் ஆகியவற்றின் மதிப்பு கூட்டப்பட்ட (ஆண்டு சதவீத வளர்ச்சி) 2.5693% என அறிவிக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகு, விவசாயத்தின் வருடாந்திர மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம் என்று நிபுணர்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர். விவசாயம் மற்ற துறைகளின் வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது கவனிக்கப்படவேண்டிய மிக முக்கிய விடயம், வறுமை, உயர் உணவுப் பணவீக்கம் என்பனவும் இந்தத் துறையில் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

தொழில்முனைவோர் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாக இருப்பதால், கிராமப்புறங்களில் அதிக விவசாயம் செய்பவர்களை வளர்ப்பது நகர்ப்புற –கிராமப்புற வேறுபாட்டையும் குறைக்க உதவும். எனவே, நவீன உள்கட்டமைப்பின் மூலம் கிடைக்கும் தன்மைமற்றும்செயல்பாடுஆகியவைவேளாண்மையின்வளர்ச்சியை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆளும்தரப்பால் மட்டும் விவசாயத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த –முடியாது. தனியார் துறையையும் அதற்குள் உள்ளீர்ப்பதற்கான திட்டங்களும் அவசியம். வலுவான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வலையமைப்பு தேவை. நிதியுதவியுடன் நின்றுவிடாது. தொழில்நுட்பத்தில் ஆபத்துக்களைச் சந்திக்க ஆர்வமுடன் இருக்கும் விவசாயிகளுக்கான உதவிகளும் உந்துதல்களும் வழங்கப்படவேண்டும். இல்லையெனில், அதிக ஆபத்து மற்றும் மாற்றத்திற்கான குறைந்த ஊக்கத்துடன் அவர்கள் பங்காற்று நிலையே தொடரும்,

தற்போதைய நிலையில் பலர் அரச மானியங்களைப் பெறுவதில் கவனம் கொண்டே விவசாயத்தைத் தொடர்கிறார்கள். மற்றும் குறிப்பிட்ட பயிர் பருவத்தை இலக்காகக் கொண்டு செயற்படுகிறார்கள். புதிய முயற்சிகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை. இந்த நிலை மாற்றப்படவேண்டும். நல்ல விதைகள், உரங்கள் வழங்குதல் மற்றும் நல்ல விவசாய நடைமுறைகளை கடைபிடிக்கும் விதிமுறைகளை மேம்படுத்துதல் அவசியம். விநியோகத்தை எளிதாக்குவதற்கு திறமையான போக்குவரத்து மற்றும் சந்தை அணுகல் தேவை. ஒரு வலுவான விநியோக முறையின் தற்போதைய பற்றாக்குறை விவசாய சந்தையை கணிசமாக தடை செய்துள்ளது.

உள்கட்டமைப்பில் உள்ள இடையூறுகள் தீர்க்கப்பட்டு, சிறந்த நடைமுறைகள்மற்றும்'வேளாண்மை'திறன்களைப்பயிற்றுவிப்பதற்கான ஒரு பயனுள்ள திட்டம் செயல்படுத்தப்பட்டால், இந்தத் துறையானது அதீதமான வளர்ச்சியைக் காட்டும் துறையாக மாறும். விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கு ஆளில்லா விமானங்கள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஏற்கனவே பின்பற்றும் இளைஞர்கள்தான், இந்தத் துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கொள்கை மற்றும் தேசிய அணுகுமுறையின் மாற்றத்தின் மையமாக இருக்க வேண்டும். திறம்பட செயல்படுத்தப்பட்டால், இறக்குமதி செய்யப்படும் விவசாய உற்பத்திகளில் தங்கியிருப்பதை இலங்கை குறைக்க முடியும். இது பெரிய அந்நிய செலாவணி இருப்புக்களுக்கான தேவையைக் குறைக்கவும், தேசிய மீள்தன்மையை உருவாக்கவும் மற்றும் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும் உதவும். ஆளும்தரப்பு அதில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவை.



## தெற்கு லெபனானில் போர் நிறுத்தம்;

# டொனால்ட் ட்ரம்ப் மத்தியஸ்தம் தொடருமா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ஹிஸ்புல்லா இஸ்ரேல் போர் நிறுத்த உடன்படிக்கை கடைசியில் அமைதி உடன்படிக்கை ஒன்றுக்கு இட்டுச் செல்வதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரவை அறுபது நாள் போர் நிறுத்தம்ஒன்றுக்குஆதரவாக10–1எனவாக்களித்த நிலையிலேயே தாக்குதல்கள் நிறுத்தப்பட்டன.

இதனையடுத்து இடம்பெயர்ந்த லெபனான் மக்கள்தமதுவீடுகளுக்குதிரும்பஆரம்பித்துள்ளனர். எனினும் இஸ்ரேலின் தாக்குதல்களில் பல கிராமங்கள்மற்றும்நகரங்கள்அழிக்கப்பட்டுள்ளன.

### அமெரிக்க மத்தியஸ்தவம்:

அமெரிக்காவின் புதிய தலைமையை ஏற்ற டொனால்ட்ட்ரம்ப்நிர்வாகிகளின்மத்தியஸ்தத்துடன் நவம்பர் 27 இல் எட்டப்பட்ட இந்த போர் நிறுத்த உடன்படிக்கையின்படிஇஸ்ரேலியதுருப்புகள்தெற்கு லெபனானில் இருந்து அறுபது நாட்களுக்குள் படிப்படியாக வாபஸ் பெறவுள்ளன.

அதேநேரம் 2006 இஸ்ரேல்–ஹிஸ்புல்லா இடையிலான போர் முடிவில் நிறுவப்பட்ட எல்லை ஒன்றான லிடானி நதியின் தெற்கு பகுதியில் இருந்து ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். அவர்களுக்கு பதில் அங்கு லெபனான் அரச படை நிலைநிறுத்தப்படவுள்ளது.

லெபனானின்ஹிஸ்புல்லாமற்றும்இஸ்ரேலுக்கு இடையே நவம்பர் 27 முதல் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு தயாராக இருப்பதாக அங்கு ஹமாஸ் அமைப்பின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கை மற்றும் பணயக்கைதிகளின் பரிமாற்றத்திற்கான உடன்படிக்கை ஒன்றுக்கு தயாராக இருப்பதாக மத்தியஸ்தர்களான எகிப்து, கட்டார் மற்றும் துருக்கியிடம் நாம் அறிவித்துள்ளோம். எவ்வாறாயும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதில் இஸ்ரேல் இடையூறாக இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

கடந்த பல மாதங்களாக உக்கிர மோதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் ஹிஸ்புல்லா–இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் ஒன்று எட்டப்பட்டு சில மணி நேரத்தின் பின்னரே ஹமாஸ் இந்த அறிவிப்பை வெளியுட்டுள்ளது.

### ஹிஸ்புல்லா இஸ்ரேல் போர் நிறுத்தம்:

ஆயினும் போர் நிறுத்தம் ஆரம்பிக்கும் கடைசி தருணம் வரை இரு தரப்பினதும் தாக்குதல்கள் நீடித்தன. போர் நிறுத்தத்திற்கு நான்கு மணி நேரத்திற்கு முன்னர் பெய்ரூட்டின் சில பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவிட்ட நிலையில் ஒரு மணி நேரத்திற்கு முன் சரமாரி தாக்குதல்களை நடத்தியது. போர் நிறுத்தப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரும் இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியது.

தெற்கு லெபனான் மக்கள் தமது வீடுகளுக்கு திரும்புவதற்கு எதிராக இஸ்ரேல் பாதுகாப்புப் படை போர் நிறுத்தத்தை ஆரம்பிப்பதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தது. எவ்வாறாயினும் போர் நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட விரைவிலேயே வெளியேற்றப்பட்ட தெற்கு லெபனான் குடிமக்கள் தமது வீடுகளுக்கு திரும்ப ஆரம்பித்துள்ளனர்.



### லெபனானில் தாக்குதல்கள்:

கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே பரஸ்பரம் மோதல்கள் இடம்பெற்று வந்த நிலையில் கடந்த செப்டெம்பரில் லெபனான் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்திய இஸ்ரேல், அங்கு தரைப்படையையும் அனுப்பியது.

இந்தப் போர் லெபனானில் கடந்த பல தசாப்தங்களில் அதிக உயிரிழப்பு கொண்டதாக இருந்ததோடு நாலாயிரம் பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

தற்போது அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் எட்டப்பட்ட இந்த போர் நிறுத்த உடன்படிக்கையின்படி இஸ்ரேலிய துருப்புகள் தெற்கு லெபனானில் இருந்து படிப்படியாக வாபஸ் பெறவுள்ளன.

அதேநேரம் 2006 இஸ்ரேல்–ஹிஸ்புல்லா இடையிலான போர் முடிவில் நிறுவப்பட்ட எல்லை ஒன்றான லிடானி நதியின் தெற்கு பகுதியில் இருந்து ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் அவர்களின் ஆயுதங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். அவர்களுக்கு பதில் அங்கு லெபனான் அரச படை நிலைநிறுத்தப்படவுள்ளது.

### லெபனான் அரசு வரவேற்பு:

நீடித்த அமைதியை மீட்டெடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் என்பதோடு இரு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# தெற்கு லெபனானில் போர் நிறுத்தம்;

4ம் பக்கத் தொடர்ச்சி...........



நாடுகளிலும் வசிப்பவர்கள் தங்கள் வீடுகளுக்கு பாதுகாப்பாக திரும்ப அனுமதிக்கும் என்று இந்த போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் வகித்த அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த போர் நிறுத்தத்தை வரவேற்றிருக்கும் லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி, நாட்டின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவது மற்றும் குடிமக்கள் தமது வீடுகளுக்கு திரும்புவதை அனுமதிப்பதற்கு இது அடிப்படையாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த உடன்படிக்கையை முழுமையாக



கடைப்பிடிக்குமாறு இஸ்ரேலை வலியுறுத்திய அவர் தற்போது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெளியேறும்படியும் ஐ.நா. தீர்மானத்தை மதிக்கும்படியும் குறிப்பிட்டுள்ளார்.



**நெதன்யாகு கடும் எச்சரிக்கை:**

அதேவேளை இந்த உடன்படிக்கையின் எந்த ஒரு பகுதியையும் ஹிஸ்புல்லா மீறினால் தாக்குதலை நடத்துவதற்கு இஸ்ரேல் தயங்காது என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பில் ஹிஸ்புல்லா தரப்பில் இருந்து உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. ஆயினும் இந்தப் போரினால் ஹிஸ்புல்லாவின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டு அதன் இராணுவ மற்றும் ஆயுதக் கட்டமைப்பை பலவீனப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்தப் போர் நிறுத்தம் காசா மீது இஸ்ரேலுக்கு அதிக அவதானம் செலுத்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. 2023 ஒக்டோபர் 7 இல் இஸ்ரேல் மீது பாலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போரில் ஹமாஸ் அமைப்பை முற்றாக அழிப்பதாக இஸ்ரேல் சூளுரைத்து வருகிறது.

எவ்வாறாயினும் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக காசாவில் இஸ்ரேல் சராமாரித் தாக்குதல்களை நடத்தியபோதும் அது பாலஸ்தீன போராளிகளின் எதிர்ப்பை தொடர்ந்து சந்தித்து வருகிறது.

காசாவில் பதினான்கு மாதங்களை நெருங்கி இருக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் இதுவரை 45000 மேல் பொதுமக்கள் கொல்லப்பட்டு 110000 மேலாக பாலஸ்தீன மக்கள் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கதிர்காமத்தில் ஒருவர் கொலை

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்ல கதிர் காமம் கொஹொம் பதிகான பிரதேசத்தில் சனிக்கிழமை கூரிய ஆயுதத்தால் தாக்கப் பட்டு ஒருவர் கொல்லப்பட் டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 39 வயது டைய செல்லகதிர்காமம் பிரதே சத்தை சேர்ந்தவர் ஆவார்.

இந்தநபர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தபோது, அந்த வீட்டின் உரிமையாளருடன் தகராறு செய்த சிலர், நபரை தாக்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மோதலை தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட் டபோது கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டார் எனவும் சந்தேக நபர்கள் கொலை செய்துவிட்டு, பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் அடையா ளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வ தற்கான நடவடிக்கைகளில் கதிர்காமம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் மொரட்டுவையில் கைது

மொரட்டுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனாவ பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

மொரட்டுவை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவ லின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவ ளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 05 கிராம் 460 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

### வெள்ளம் பாதித்த மக்களுக்கு

# உரும்பிராய் லயன்ஸால் காலை, மதிய உணவுகள்

தெல்லிப்பழை ஜே - 230 கிராமசேவகர் பிரிவில்உள்ளகலைவாணிசனசமூகநிலையத்தில் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காலை, மதிய உணவுகள் உரும்பிராய் லயன்ஸ் கழகத்தால் வழற்கப்பட்டன.

உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ம.மயூரதனின் நிதி அனுசரணையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலி.வடக்கு முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்களும், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களுமான லயன் சி.ஹரிகரன், லயன் செ.விஜயராஜ் ஆயியோரும், உரும்பிராய் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் பா.சஞ்சீவன், யாழ்ப்பாணம் ஒறியன்ற் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் திரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.






### காரைதீவில்

# 60 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணம்

(பாறுக் ஷிஹான்)

சேவையின் சிகரம் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தரின் 121 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டுமார்க்கண்டு முதலாளியின் சமூக அறக்கட்டளை நிவாரணப்பணிகளை நேற்று முன்னெடுத்தது.

அண்மையில் நாட்டில்ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.




இதனை அடுத்து மார்க்கண்டு முதலாளியின் சமூக அறக்கட்டளை சேவையின்சிகரம் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்த ஜீ அவர்களின் 121 ஆவது ஜனன தினத்தினை முன்னிட்டு காரைதீவு 7 ஆம் பிரிவில் 60 குடும்பங்களுக்கு 2000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் வைத்து வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வானது காரைதீவு இந்து சமய விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளப் பாதிப்பிற்கு முகம்கொடுத்த மக்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன

(பாறுக் ஷிஹான்)

வெள்ளப்பாதிப்பிற்குள்ளான பாண்டிருப்பு மேற்கு குடியிருப்பு மக்களுக்கு 'தாராள உள்ளங்கள் அறக்கட்டளை' அமைப்பால் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



அண்மையில் பெய்த அடை மழை காரணமாக வெள்ளப் பாதிப்பிற்குள்ளான பாண்டிருப்பு மேற்கு குடியிருப்பு மக்களுக்கு தாராள உள்ளங்கள் அறக்கட்டளை அமைப்பால் உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், அமைப்பின் தலைவர் ஜெயபிரகாஷ், செயலாளர் திரு.சிறிஹரன், பொருளாளர் திரு.நவநீதன், மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் , கிராம சேவகர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மழை வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட பாண்டிருப்பு மேற்கு குடியிருப்பில் வசிக்கும் 116 குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொதிகளே இவ்வாறு வழங்கிவைக்கப்பட்டன.





அத்துடன் வெள்ள நீர் காரணமாக தமது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கும் பெறுமதியான உணவுப் பொருள்களை அவ்வமைப்பு வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த உணவு பொதியில் அரிசி ,பருப்பு ,சீனி ,பால் மா ,பிஸ்கட் , ரின் மீன், நெத்தலி ,உப்பு ,தேயிலை, மிளகாய்த்தூள் என்பன உள்ளடங்கியுள்ளன.

# நெல் இலைச்சுருட்டி நோய்த் தாக்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரிப்பு

சீரற்ற காலநிலையைத்தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் நெல் வயல்களில் 'மடிச்சுக்கட்டி 'என்று சொல்லப்படுகின்ற நெல் இலைச்சுருட்டி நோய் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு கால போக நெற்செய்கை குளங்களின் கீழான நெற்செய்கைமற்றும்மானாவாரிநெற்ச்செய்கையாக மாவட்டத்தில் 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நிலவிய சீரற்ற காலநிலையைத்தொடர்ந்து நெற்பயிர்களில் மடிச்சுக்கட்டி நோய்யின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.




கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தின் கீழ் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மடிச்சுக்கட்டி நோய்யால் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒரு போகத்தை மட்டும் வாழ்வாதாரமாகவும் உணவுத்தேவைக்காகவும் நெற்செய்கை மேற்கொள்கின்ற நிலையில் அதிகரித்த நோய்த்தாக்கம் காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த போகங்களிலும் தாம் நஷ்டத்தை எதிர்கொண்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் குறித்த நோயைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (113)

உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ள

# மலையக மக்கள் முன்னணி சீரமைப்பு பணியில் மும்முரம்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் பின் மலையகத்தின் பல கட்சிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொழிலாளர் தேசிய சங்கம் என்பன வெளிப்படையாக அறிவித்துள்ள நிலையில் மலையகமக்கள்முன்னணியின்முக்கியஸ்தர்களின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் தலவாக்கலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் எதிர்வரும் வருடங்களில்நடைபெறவுள்ளஉள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் மாகாண சபை தேர்தல் ஆகியவற்றை எவ்வாறு எதிர் கொள்வது என்பது தொடர்பாக இந்த கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போதுகலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் மலையக மக்கள்முன்னணிதனித்துப்போட்டியிட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இதற்கு கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் ஆதரவாகக் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக ஐவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டதாக முன்னணியின் பெயர் குறிப்பிட விரும்பாத முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் மலையகத் தொழிலாளர் முன்னணியின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் புதியவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் அங்கு விரிவாக பேசப்பட்ட நிலையில், இது தொடர்பில் ஒரு வாரத்தில் தனக்கு அறிக்கை ஒன்றைத் தருமாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் உத்தரவிட்டுள்ளார். இந்த மாற்றங்கள் தொடர்பாக இரண்டு வாரங்களில் தேசிய சபையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகயும் முன்னணியின் முக்கியஸ்தர் தெரிவித்துள்ளார்.

மலையகமக்கள்முன்னணிபுதியமாற்றத்திற்கு ஏற்றவகையில்மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான எந்த விட்டுக் கொடுப்பைச் செய்வதற்கும் தான் செய்வதற்கு தயாராக இருக்கிறார் என்றும் முன்னணியின் தலைவரான இராதாகிருஸ்ணன் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கையின் அனைத்து பாகங்களிலும் மலையக மக்கள் முன்னணியை விரிவாக்கவேண்டும் என்று தன்னிடம் பல மாவட்டங்களில் இருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரத்தில் இது தொடர்பான விரிவான கலந்துரையாடல் ஒன்றை கொழும்பில் ஏற்பாடு செய்யவுள்ளார் என்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்து மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படுவதற்கு விரும்புகின்றவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களையும் இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் தலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார்

# மழைக்கு வாய்ப்பு

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட ஆழ்ந்த தாழமுக்கம் காரணமாக அடுத்த 36 மணித்தியாலங்களுக்கு வடக்கு, மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை பெங்கால் புயல், நேற்று காலை 11.30 மணியளவில் வட தமிழகம் - புதுச்சேரி கரையைக் கடந்துஇந்தியாவுக்குள்நுழைந்தது.

பெங்கால் புயல் காரணமாக இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில்,இராணுவத்தினர் மற்றும் மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக இந்தியத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் இதன்போது மீட்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், புதுச்சேரியில் கடந்த 30வருடங்களில் இல்லாத அளவிற்கு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதுச்சேரியில் 480 மில்லிமீற்றருக்கும் அதிகளவிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதற்கமைய, தற்போது புதுச்சேரியின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பன்னிரு நகரங்களில் காற்றின் தரம் பாதிப்பு

இலங்கையின் 12 நகரங்கள் மற்றும் பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளன.

இரத்தினபுரி, கிளிநொச்சி, கம்பஹா, திருகோணமலை, அம்பலாங்கொடை,தம்புள்ளை, காலி, நீர்கொழும்பு, புத்தளம், மஹியங்கனை, குருநாகல் மற்றும் கலாவெள ஆகிய பிரதேசங்களிலேயே காற்றின் தரம் இவ்வாறு ஆரோக்கிமற்ற நிலையில் காணப்பட்டது.

காற்றின்தரக்குறியீட்டின்படி, 0 முதல் -50 வரை நல்லது, மற்றும் 51- முதல் 100 வரை மிதமானது. அத்தோடு, 101 முதல் -150 வரை சிறிது சாதகமற்றது என்பதோடு 151- முதல் 200 வரை என்பது மிகவும் சாதகமற்ற நிலைமையாகும்.

201 முதல் -300க்கு இடையே காற்றின் தரம் காணப்படுமாயின் மிகவும் தீங்கு விளைவிக்கும் என்பதோடு, அந்த எண்ணிக்கை 301- முதல் 500ஆக காணப்படுமாயின் அது ஆபத்தானது.

இந்தநிலை காரணமாக உணர்திறன் உடையவர்கள் சுவாசிப்பதில் சிரமங்களை அனுபவித்தால்உடனடியாகமருத்துவ ஆலோசனைகளைப்பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சுதந்திரதினத்தில் கலந்துகொள்ள 9 நாட்டு தூதர்களுக்கு அழைப்பு

இலங்கைக்கான 9 புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஆணையர்கள் ஆகியோரை சுதந்திர தின விழாவில் பங்கேற்குமாறு அயலுறவுத்-துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

6நாடுகளின்தூதுவர்கள்மற்றும்உயர்ஆணையர்களுடன்அயலுறவுத்துறைஅமைச்சில்நடைபெற்ற சந்திப்பில் அவர் இந்தக் அழைப்பை விடுத்தார். புர்கினா பாசோ, போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா, அஜர்பைஜான் குடியரசு, ஜோர்ஜியா, பெலாரஸ் குடியரசு, ஆர்மீனியா குடியரசு, ஸ்பெயின் இராச்சியம், கொங்கோ குடியரசு மற்றும் கினியா குடியரசு ஆகிய நாடுகளுக்கான புதிய தூதர்கள் மற்றும் புதிய ஆணையர்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர்

புதிய அரசுக்கு வாழ்த்து தெரிவித்த அந்த தூதர்கள், அரசின் பணி ஒழுங்கை பாராட்டினர். மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கையின் மறுமலர்ச்சிக்கு முன்பைவிட வலுவான ஆதரவை வழங்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

உத்தியோகபூர்வ சந்திப்புக்கு வந்திருந்த இராஜதந்திரிகள், இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் அந்நாடுகளில் தூதரகங்களை நிறுவுவதற்கும் விருப்பம் தெரிவித்தனர். இலங்கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்க புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளவும் அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# எதிர்க் கட்சித் தலைவரை சந்தித்தார் ஜப்பான் தூதர்

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் ஜப்பான் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் இடையிலானசந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட காலமாக இருந்து வரும் இராஜதந்திர உறவை தொடர்ந்தும் பேணுமாறும், இதற்கு தன்னால் முடிந்த பங்களிப்பை பெற்றுத் தருவதாகவும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜப்பான் தூதுவரிடம் தெரிவித்தார்.

அவ்வாறே, கடந்த காலங்களில் ஜப்பானினால் இலங்கையில் முன்னெடுத்து வரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீள ஆரம்பிக்குமாறும், இதற்குத் தேவையான பூரண ஆதரவை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு தாம் வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்திபாராளுமன்றஉறுப்பினர்வைத்தியர் காவிந்த ஜயவர்தனவும் இச்சந்திப்பில் கலந்து கொண்டார்.

# பெரிய வெங்காயத்திற்கான வரி ரூ. 20 ரூபாய் குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் மீது விதிக்கப்பட்ட விசேட வரியை ஒரு கிலோவிற்கு 10 ரூபாயாக குறைத்துள்ளது ஆளும்தரப்பு. ஒரு மாதத்துக்கு இந்த வரிக் குறைப்பை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் டிசம்பர் 01 முதல் டிசம்பர் 31, 2024 வரையிலான காலகட்டத்தில் பெரிய வெங்காயத்திற்கான வரி 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் முன்னைய வரி 30 ரூபாயாக இருந்தது.

இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட சரக்கு வரியை மாற்றியமைக்காமல் தொடர்வதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

புதிய வரித் திருத்தங்கள் 2024.11.30 திகதியிட்ட வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்டுள்ளதோடு அதற்கான வர்த்தமானி அறிவித்தலின் நிபந்தனைகள் டிசெம்பர் 1 முதல் டிசம்பர் 31, 2024 வரை அமுலில் இருக்கும் என்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வெங்காயத்தின் சந்தை விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் உருளைக் கிழங்கு மற்றும் பிற காய்கறிகளுக்கான சாத்தியமான விலை உயர்வு பற்றிய கவலைகளுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானத்துக்கு தற்போது நிலவும் பாதகமான வானிலை மற்றும் பண்டிகைக் காலங்களில் ஏற்பட்டுள்ள தேவை அதிகரிப்பு காரணமாக இருக்கின்றது.

மேலும், விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சு ஆகியவற்றின் பரிந்துரைகளின் அடிப்படையில், இரு விவசாயிகளின் தேவைகளையும் சமப்படுத்தும் வகையில் இந்த வரி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# மின் கட்டண திருத்தம் டிசெம்பர் 6 கையளிப்பு

மின்சார சபையினால் மின் கட்டண திருத்த யோசனை டிசெம்பர் 6 பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கான முன்மொழிவை தயாரிக்கும் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

பழைய முறைமைக்கு அமைவாக, மின்சாரக் கட்டணத்தை 6 சதவீதம் முதல் 11 சதவீதம் வரை குறைப்பதற்கான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை முன்னர் சமர்ப்பித்திருந்தது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த முன்மொழிவை நிராகரித்தது.

அடுத்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் கட்டண திருத்த முன்மொழிவைத் திருத்துமாறு ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்தது. அடுத்த ஆண்டு மின்கட்டண திருத்தம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## தலைவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிடப்பட்டுஅங்குகாட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அங்குவந்திருந்தவல்வெட்டித்துறைபொலிஸார் தமிழீழவிடுதலைப்புலிகளின்தலைவருடைய புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த புகைப்படத்தினை மறைத்துவிட்டு பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவரது புகைப்படத்தை முகநூலில் பதிவிட்டதாக இணுவில்பகுதியைச்சேர்ந்தஇளைஞரொருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் இந்தப் பிறந்தநாள் கொண்டாட்டம் தொடர்பாக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2025 பெப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளனர் என்று தெரிவித்தார்.

ஆளும்தரப்பு எதிர்வரும் காலங்களில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கும் என்று வாகன இறக்குமதியாளர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2025 பெப்ரவரியில் வாகன இறக்குமதியை அனுமதித்தால் தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய இலங்கை மத்திய வங்கி இணங்கியுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியமும் வாகன இறக்குமதிக்கான அனுமதியை வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

## ஒன்றரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2635 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இதுவரை 24 மாவட்டங்களில் 142,624 குடும்பங்களைச் சேர்ந்த 479,871பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த சில நாட்களாக நாட்டின் பல மாகாணங்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

கடும் மழை காரணமாக தெதுரு ஓயா, பேராறு, உல்ஹிட்டிய ரத்கிந்த, பொல்கொல்ல, நாச்சதுவ, ராஜாங்கனை, கலாவெள மற்றும் வெஹெரகல ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் தொடர்ந்தும் திறக்கப்பட்டுள்ளன.

மகாவலி ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் சில நாட்களாக மூடப்பட்டிருந்த கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியானது தற்போது இலகு ரக வாகன போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக ஹாலிஎல உடுவர மேல்பகுதியில் விழுந்த மண் மற்றும் கற்கள் அகற்றப்பட்டு வருவதாகவும், பதுளை மற்றும் எல்லயிக்கு இடையே தொடருந்து சேவையை இயக்க இன்னும் சில நாட்கள் ஆகுமென தொடருந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கலா ஓயா, மல்வத்து ஓயா, ஹெட ஓயா, தெதுருஓயா, மஹாவலி கங்கை மற்றும் முந்தேனி ஆற்றுப்படுகை ஆகியவற்றுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய அறிவிப்புகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன.

சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக, 09 மாவட்டங்களில் உள்ள 72 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குகட்டிட ஆராய்ச்சிநிறுவனத்தினால் விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

## அவ்வளவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள்நாட்டைமீளக்கட்டியெழுப்புவோம். தற்போதுள்ள மோசமன நெருக்கடியான சூழல்களை மாற்றியமைப்போம். எதிர்கால பிள்ளைகள் வேதனைப்படும் நிலமையற்ற நாடடொன்றை உருவாக்கவேண்டியது எமது கடமையாகும்.

இந்த ஆளும்தரப்பினைப் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மீண்டும் கவிழ்ப்பதற்கு இடமளிக்கப்போவதில்லை. நாங்கள் நூற்றுக்கு மூன்று சதவீதமான வாக்கு வங்கியைக் கொண்டிருந்தவர்கள். அதிலிருந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துத்தான் தற்போது ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ளோம். அதனால் அதிகாரத்தினை இலகுவாகக் கைவிட்டு விடுவோம் என்று நினைக்க வேண்டாம். நாட்டை முறையாக கட்டமைத்த பின்னரே மக்கள்விரும்பினால்ஆட்சியைஅவர்களிடத்தில் ஒப்படைப்போம் என்றார்.

## சேதமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பயிர்ச்சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகளை இன்று ஆரம்பிக்கவுள்ளதாக சபையின்தலைவர்பிரேமசிறிஜாசிங்கஆரச்சி தெரிவித்தார்.

அதிகளவிலான பயிர்ச்சேதம் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய நிலங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

இதேவேளை,வெள்ளத்தால்அழிவடைந்த நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், சோயா செய்கைகளுக்கு ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபாவிற்கு உட்பட்டு நட்டஈடு வழங்கப்படும் என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

இதற்காக ஆளும்தரப்பால் 1,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சபை குறிப்பிட்டுள்ளது. பலத்தமழையுடனானவானிலைகாரணமாக 390,000 ஏக்கர் வரையான வயல்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

## ஆளும்தரப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதற்கும்பொருளாதாரரீதியாகமீளஎழுச்சி அடைவதற்கும் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது.

பொருளாதார மேலெழுச்சி திட்டங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

### முதன் முறையாக

# வவுனியா வைத்தியசாலையில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்


வவுனியா வைத்தியசாலையில் முதன் முறையாக ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

பதவியாவைச் சேர்ந்த கர்ப்பவதியொருவர் வெள்ளிக்கிழமை இரவு பிரசவ வலியுடன் சேர்க்கப்பட்ட நிலையில் அவரிற்கு சிசேரியன் அறுவைச்சிகிச்சைமூலம் 4 குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தாயார் மகப்பேற்று வைத்திய நிபுணர் காமினி அவர்களால் தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வந்துள்ளதுடன், அவரது மகப்பேற்று வைத்திய விடுதியாகிய 7ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டு வைத்தியர் திலீபனால் சிசேரியன் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு நான்கு குழந்தைகளும் பிரசவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வவுனியா வைத்தியசாலையில் நான்கு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிரசவிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும். மேற்படி தாயாரும் குழந்தைகளும் நலமாகவுள்ளதுடன், நான்கு குழந்தைகளும் சிறப்பு குழந்தை நலப்பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (100)

# சுவிஸ் தூதரக அதிகாரிகளை சந்தித்தார் சிறீதரன் எம்.பி.



இலங்கைக்கானசுவிஸ்தூதரகமற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறீதரன் எம்.பியின் இல்லத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, இலங்கையிலிருந்து சுவிஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடக் கோரிக்கைகள் தொடர்பில் சுவிஸ் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பிலும், இந்த ஆண்டு தமிழ்த்தேசிய மாவீரர் நாள் ஏற்பாடுகள் உள்ளிட்ட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில்கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

மாலைக்கதிர்
Maalaikkathir

ஆசிரியர் பீடப் பணியாளர் தேவை

மாலைக்கதிர் நாளிதழில் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

- உதவி ஆசிரியர் / பயிலுநர்கள்
- ஒப்பு நோக்குனர்



தகுதி, திறமையின் அடிப்படையில் கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் ஆர்வமுடையவர்கள் தமது சுயவிவரக்கோவையினை 077 307 8799 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்

காலைக்கதிர் Kalaikkathir

# மருதமுனையில் பெரும் சிரமதானம்; ஆதம்பாவா எம்.பி. நேரில் பார்வை

(ஷினாஸ்)



கடந்த இரண்டு தினங்களுக்கு முதல் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மருதமுனை பிரதேசத்தின் மேட்டுவட்டை பிரான்சிற்றி வீட்டு திட்டம், 65 மீற்றர் வீட்டுத்திட்டம், ஸகாத் கிராமம் உட்பட அப்பகுதியில் இருந்து ஷம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை பிரதேச வைத்தியசாலை, ஹியூமன் லின்ங் நிறுவனம் உட்பட பள்ளிவாசல்கள் பொது இடங்கள் முற்றாக வெள்ள நீரால் சேதமடைந்திருந்தன.

குறித்து இந்தப் பகுதியை சுத்தம் செய்து மக்களை வழமைக்கு திரும்ப வைக்கும் பாரிய வேலைத் திட்டம் ஒன்று நேற்று அப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதில் கல்முனை மாநகர சபை, கல்முனை பிரதேச செயலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மருதமுனை அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தினர், பொதுமக்கள், ஊர் பிரமுகர்கள், விளையாட்டு கழகங்கள், அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் ஒன்றிணைந்து இந்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். இதனால் குறித்த நேரத்துக்குள் அப்பகுதியை முற்று முழுதாக சிரமதானம் செய்து ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் இப்பகுதிக்கு வருகை தந்த திணைக்கள தலைவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.



குறித்த பகுதிக்கு வருகை தந்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எ.ஆதம்பாவா நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டு துரிதமாக சிரமதானப் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

# விளையாட்டு உபகரணங்கள் மழை வெள்ளத்தினால் நாசம்

## சாய்ந்தமருதில் ரூ. 20 லட்சம் வரையில் சேதம்

(நூருல் ஹுதா உமர்)



அண்மையில் நாட்டை ஸ்தம்பிக்க செய்த வெள்ளம் வடக்கு கிழக்கு மாகாணத்தை அதிகம் சேதமாக்கியது. அதில் அம்பாறை மாவட்ட தாழ்நிலங்கள் வெள்ளத்தில் சிக்கி கடுமையான பாதிப்புகளை சந்தித்தது. அதன் ஒரு பகுதியாக சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கி குளம் போன்று வெள்ளநீரினாலும், சல்பினியாக்களாலும் நிறைந்து காட்சியளித்தது.

குறித்த மைதான களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த சாய்ந்தமருது பிரதேச 16 விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு உபகரணங்கள் வெள்ளத்தில் மூழ்கி பாவனைக்கு பொருத்தமற்றதாக அழிவடைந்துள்ளதுடன் மிகப் பெறுமதி வாய்ந்த கடின பந்து துடுப்பு மட்டைகள் அழிவடைந்து உடையும் அபாயத்தை சந்தித்துள்ளது.

மேலும் கடின பந்து விளையாட்டுக்கு பயன்படுத்தப்படும் ஆடுகள விரிப்பு (மெடின்) வெள்ளத்தில் மூழ்கி பாவனைக்கு பொருத்தமற்றதாக அழிவடைந்துள்ளன.



20 லட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய இந்த விளையாட்டு உபகரணங்களின் பாதிப்பால் சாய்ந்தமருது விளையாட்டுத்துறை அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சாய்ந்தமருது பிரதேச விளையாட்டுக் கழக வீரர்கள், நிர்வாகிகள் வெள்ள நிவாரண பணிகள், அனர்த்த முன்னாயத்த பணிகள், மீட்பு பணிகளில் ஈடுபட்டு வரும் இந்நிலையில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும், கல்முனை மாநகர சபை உட்பட பொறுப்பு வாய்ந்த அரச திணைக்களங்கள் இந்த மைதானத்தை வீரர்கள் பயன்படுத்தும் விதமாக துரிதமாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், விளையாட்டு அமைச்சு மற்றும் திணைக்களம் என்பன விளையாட்டுக் கழகங்களின் இந்த அவல நிலையை போக்க உதவிகளை செய்ய முன்வர வேண்டும் என்று விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகங்கள் கேட்டுக்கொண்டுள்ளது.




# மாவடிப்பள்ளி சம்பவம் கடும்கவலை தருகிறது

## மருதமுனை ஊடகப் பேரவை அனுதாபம்

(ஷினாஸ்)

காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்தில் கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட அனர்த்தத்தில் 06 மத்ரஸா மாணவர்கள் உட்பட 8 பேர் வெள்ளநீரில் காவு கொள்ளப்பட்ட சம்பவம் கடும் கவலையை தருவதாக மருதமுனை ஊடக பேரவை வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரவையின் சார்பில் அதன் செயலாளர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சீரற்ற காலநிலையில் துயருற்றிருந்த மக்களுக்கு மாவடிப்பள்ளி உழவு இயந்திர (ரெக்டர்) விபத்து மிகப் பெரும் அதிர்ச்சியை கொடுத்திருக்கிறது.

தங்கள் பிள்ளைகளை பொறுப்பேற்க அக்கரையில் உறவினர்கள் பார்த்திருக்க பிள்ளைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்ட துயரச் சம்பவம் இலகுவில் ஆறுதல்படுத்தி விட முடியாத தொன்றாகும்.

இச் சம்பவத்தில் உயிர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், சம்மாந்துறை உறவுகளுக்கும் சாய்ந்தமருது மக்களுக்கும் மருதமுனை மக்களின் ஆறுதல்களையும் பிரார்த்தனைகளையும் பகிர்ந்தளிக்கின்றோம்

சம்பவம் நடந்த மறுகனமே மீட்புப்பணியில் ஈடுபட்ட அனைத்து பணியாளர்களுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் ஊடக நண்பர்களுக்கும் பாராட்டுக்களையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறை நாட்டத்தினை யாராலும் உணரவும் முடியாது. அவ்வகையில் அதனைப் பொருந்திக் கொள்வதே மனதுக்கு ஆறுதலளிக்கும் கைங்கரியம் ஆகும்.

மாணவர்கள் கல்வி கற்கும் மத்ரஸாவின் நிர்வாகிகள் வெளியிட்ட ஊடக அறிவிப்பயும் நாம் செவிமடுத்தோம். யாரும் யாரையும் விமர்சிப்பதில் இருந்து விலகி மரணித்த பிள்ளைகளின் ஈடேற்றத்திற்கு பிரார்த்தனையில் ஈடுபடுவோம். அது ஒன்றே எமக்கான ஆயுதமாகும்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் இருக்க அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள், சிவில் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து பாதுகாப்பான பாலம் ஒன்றை அமைப்பதற்கான செயற்பாட்டை நோக்கி நகர வேண்டிய அவசர தேவைப்பட்டுள்ளதாக சகலரும் உணர வேண்டும்.

என அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# யாழ். சுதுமலையில் விபத்து; பிறப்பு - இறப்பு பதிவாளர் சாவு

யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிறப்பு - இறப்பு பதிவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மானிப்பாய் வீதி, தாவடி கிழக்கு, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தாவடி வீதியில் அமைந்துள்ள சுதுமலைப் பகுதியில் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நபர் மானிப்பாயில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த கார் மோதி விபத்தில் சிக்கியுள்ளார்.

அதன் பின்னர், நோயாளர் அம்புலன்ஸுக்கு அறிவிக்கப்பட்டபோதிலும் 30 நிமிடங்களின் பின்னரே அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளது.

அதனையடுத்து, அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் சிக்கியவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுவந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏறாவூரில் வெள்ளம் பாதித்த குழந்தைகளுக்கு மகேஷ் திக்சனவால் நிவாரணப் பொதிகள்



ஏறாவூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீரர் மகேஷ் திக்சனவின் இரண்டு லட்சம் ரூபா நிதி உதவியில் ஏறாவூர் யங் ஹீரோ விளையாட்டுக் கழகம் நிவாரணப் பொருட்கள் அடங்கிய 100 பொதிகளை வழங்கிவைத்தது.

ஏறாவூரில் நிலவிய சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிலைப்பாட்டினை அறிந்து இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீரர் மகேஷ் திக்சனாவிடம் ஏறாவூர் யங் ஹீரோ விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் இலங்கை பொலிஸ் அணி மற்றும் பேஷ்போல் விளையாட்டு வீரருமான யு. நஜிவுல்லாஹ் சமூக வலைத்தளத்தின் ஊடாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய மகேஷ் திக்சன 2 லட்சம் நிதி உதவி வழங்கினார்.

இதற்கமைய யங் ஹீரோ விளையாட்டுக் கழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள 100 குழந்தைகளை தெரிவு செய்து அவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பால்மா மற்றும் இதர பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்கிவைத்தது.

இதேவேளை இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் மகேஷ் திக்சனா வழங்கிய உயரிய மனிதநேய பணிக்கு விளையாட்டு கழகம் நன்றி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சைவப் புலவர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரல்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான இளஞ் சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை சித்தி அல்லது சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அநுட்டித்து வரும் 40 வயதிற்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் கீழ்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தேர்வு அல்லது சித்தாந்த பண்டிதர் தேர்வு அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிட பாசா விருத்திச்சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கவிரும்புவர்கள் விண்ணப்பபடிவத்தை இணையத்தில் பெற்று பரீட்சை கட்டணமாக 1200 ரூபாவை இலங்கை வங்கியில் அகில இலங்கை சைவப்புலவர்சங்கம் கணக்கு இல 1133272 இற்கு வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுடன் எதிர்வரும் 30.12.2024 இற்கு முன்பாக சைவப்புலவர் சி.கா.கமலநாதன்

தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் மாசேரி வரணி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

வங்கிப்பற்றுச்சீட்டு விண்ணப்படிவத்துடன் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதீக அறவீட்டுக்கட்டனம் 300 ரூபாவுடன் 15.01.2025 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கு பிந்திய விண்ணப்பங்கள் ஏதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 0777197067, 0779773538 0776132176, என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

பரீட்சைகள் 2025 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சேமமடுவில் வாள்வெட்டு சம்பவம் குடும்பஸ்தர் வவுனியாவில் இறப்பு

வவுனியா ஓமந்தை சேமமடு பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

மேற்படி பகுதியில் மாடுகளை சாய்த்துக்கொண்டுவந்த குடும்பஸ்தர் மீது குழுவொன்று வாளால் வெட்டியுள்ளது. இதனால் படுகாயமடைந்த அவர் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் அவர் ஏற்கனவே இறந்துள்ளார் என வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் நாவற்குளம் பகுதியை சேர்ந்த செல்வநிரோயன் வயது 46 என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (100

# குருநகர் பிரதேசத்துக்கான துறைமுகம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு ஆளுநர் உறுதி

குருநகர் பிரதேச மக்களின் நீண்ட கால கோரிக்கையாக உள்ள குருநகர் பிரதேசத்துக்கான துறைமுகத்தை அமைப்பது தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் ஊடாக கலந்துரையாடி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் உலக கடற்றொழிலாளர் விழா குருநகர் தொழிலாளர் இளைப்பாறு மண்டபத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஆளுநர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

விவசாயம் மற்றும் கடற்றொழில் வட மாகாணத்தின் முக்கியமான தூண்கள். இந்தப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக யாழ். மாவட்டச் செயலராக நான் பணியாற்றிய காலத்தில் பல்வேறு விடயங்களைச் செய்திருக்கின்றேன்.

அன்றும் இன்றும் உங்கள் பிரதேசத்தின் பிரதேச செயலராக இருக்கின்ற சா.சுதர்சன் அவர்களும் இதில் முக்கிய பங்காற்றியிருக்கிறார். கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கின்ற இ.சந்திரசேகர், எமது பிரதேசத்தின் மேம்பாடு தொடர்பில் அக்கறையுள்ளவர். அவர் பலவற்றை உங்களுக்காக செய்வார்.

கடந்த காலத்தில் உங்களின் கோரிக்கைக்கு அமைவாக இந்தப் பகுதிக்கு துறைமுகம் அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டபோதும் அது சாத்தியமாகவில்லை. அதன் தேவைப்பாட்டை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் கடற்றொழில் அமைச்சருடன் இணைந்து அதை செயற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

நீங்கள் இன்றைய தினம் ஓய்வுபெற்ற மீனவர்களை கௌரவிக்கின்றீர்கள். அது பாராட்டப்படவேண்டிய விடயம். இவ்வாறான உதவிகளை செய்வது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு தேவையானது. இந்தப் பிரதேசத்தின் - கடற்றொழிலாளர்களின் தேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து நாங்கள் பணியாற்றுவோம் என்றார்.

முன்னதாக ஆசியுரை ஆற்றிய குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அடிகளார், வடக்கு மாகாண ஆளுநராக பொருத்தமான ஒருவரைத்தான் நியமித்திருக்கின்றார்கள். அவரை எந்த நேரத்திலும் யாரும் அணுகமுடியும். இந்த மாவட்டத்தின் மாவட்டச் செயலராக இருந்து பல அபிவிருத்திப் பணிகளைச் செய்தவர். மக்களின் பிரச்சினைகளை புரிந்துகொள்ளக்கூடிய ஒருவர். அவரது காலத்தில் இந்த மாகாணம் முன்னேற்றமடையும் என நம்புவதாகக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் யூலியன் சகாயராஜா தனது உரையில், 1990ஆம் ஆண்டு போர்க்காலத்தில் இந்தப் பகுதியிலிருந்த வெளிச்ச வீடு அழிக்கப்பட்டதாகவும் அதை மறுசீரமைத்துத் தருமாறும் கோரிக்கை முன்வைத்தார். அத்துடன் துறைமுகத்தையும், அந்தப் பிரதேசத்தின் பிரதான வீதியையும் புனரமைத்துத்தருமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இ.போ.ச. பஸ் சாரதிகள் இருவர் கடை உரிமையாளர் மீது தாக்கு

ஹட்டன் பஸ் தரிப்பிடத்தை அண்மித்த பகுதியில் இ.போ.ச. பேருந்து சாரதிகள் இருவர் கடை உரிமையாளர் ஒருவரைத் தாக்கியதாக கடந்த வியாழக்கிழமை ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

கடை உரிமையாளருக்கும் சாரதி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே கடை உரிமையாளர் தாக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் பஸ் சாரதி ஒருவர் கடை உரிமையாளரைத் தாக்கினார் எனவும் பின்னர், அங்கு வந்த மற்றும் ஒரு சாரதியும் இணைந்து தாக்கினார் எனவும் முறைப்பாடில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் காயமடைந்த கடை உரிமையாளர் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரியவந்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.12.2024இல் வெளியிடப்பெற்றது